Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்12 வள்ளுவர் ஆண்டு2028 ஆவணி20வெள்ளிக்கிழமை(5-9-1997)UTHAYAN A Lively National Tamil Daily கதிர்269

## அம்பாறையில் கிரனைட் வீச்சு பவுஸர் எரிந்து சாரதி பலி!

மட்டக்களப்பு செப். 5

டீஸல் எடுத்துச் சென்ற பவுஸர் மீது மேற் கொள்ளப் பட்ட கிரனைட் தாக்குதலின் போது பவுஸர் தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமாகியது பவுஸரின் சாரதி பலியானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6-45 மணி அளவில் அம்பாறை - கண்டி வீதியில் இடம் பெற்றது.

கண்டியில் இருந்து அம்பாறை பெற்றோலியம் கூட்டுத் தாபனத்திற்கு டீஸலை ஏற்றி வந்த தனியாருக்குச் சொந்த மான பவுஸரே தீக்கிரையாகி உள்ளது.

இச்சம்பவத்தின் போது பவுஸரின் கிளினர் மயிரிழையில் தப்பினார். (இ-21)

## குருநாகலில் சட்டவிரோத ஆயுத உற்பத்தி நிலையம்

### 28 பேர் கைது செய்யப்பட்டனர்

மட்டக்களப்பு, செப். 5

குருநாகல், பொல்பிட்டிகம என்ற இடத்தில் சட்ட விரோத ஆயுத உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று பொலீ ஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் மகஸின் துவக்கு - 4, சொட் கண் - 14, கட்டுத் துவக்கு - 9, ரி - 56 மகஸின் – 49, சாதாரண துவக்கு - 6 ஆகியவை அடங்கும்.

இவை கண்டெடுக்கப்பட்ட வீட்டின் உரிமையாளரும் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் ஆவார். (இ-3-4)

பாலியல் வன்மு றை மயற்சி:

## கதிரிப்பாய் சம்பவம் குறித்து படை வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், செப். 5

அச்சுவேலி, கதிரிப்பாய் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து ''பராயமடையாத பிள்ளை மீது (Minor) பாலியல் வன் முறை முயற்சி''என்ற தலைப் பில் 51 ஆவது படையணி யின் தலைமைப்பீடம் விடுத்த அறிவித்தலில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

இம்மாதம் 2 ஆம் திகதி பிற் பகலில் 'டீன் - ஏஜ்' பெண் ஒருத்தி மீது பாலியல் துன் புறுத்தல் மேற்கொள்ளப்பட் டது தொடர்பான முறைப் பாடு ஒன்று அச்சுவேலி இரா ணுவ முகாமில் செய்யப்பட் டது.

இது தெடர்பாக உடனடி யாக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டன. குற்றம் இழைத்தவர் என கருதப்படு பவர் கைது செய்யப்பட்ட துடன், விரிவான புலன் விசா ரணைகள் உடனடியாக ஆரம் பிக்கப்பட்டன.

அன்றைய தினமே பிள்ளை யும் அவளது பெற்றோரும் அச்சுவேலி மருத்துவ மனை பொறுப்பதிகாரி முன் ஆஜர் படுத்தப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

ஆள்கள் காணாமற்போன சம்பவங்கள்;

## நடவடிக்கை எடுக்குமாறு மன்னிப்புச்சபை கோரிக்கை

கொழும்பு, செப். 5

''1988 இல் இருந்து இலங்கையில் 16 ஆயிரத்து 742 பேர் காணாமற்போய் இருப்பது சாட்சியங்கள் மூலம் தெரிய வருகிறது. இதற்கு காரணமானோர் மீது நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.''

சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசிடம் மேற்கண் டவாறு கோரிக்கை விடுத் துள்ளது என வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேசமுன் ஐ.தே.கவுடன் உடன்பாடுகாண அரசு முயற்சிக்கும்

## அதற்கே முன்னுரிமை வழங்கப்படும் என்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, செப்ரெம்பர் 5

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சை ஆரம்பிக்க முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேசி உடன்பாடு ஒன் றைக் காணவேண்டிய நிலையில் உள்ளது. அப்படி இல்லா மல் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தினால், இனப்பிரச் சினைத் தீர்வு தொடர்பாக பிரதான கட்சிகளுடன் உடன்பாடு காணப்பட்டதா என்ற கேள்வியை பேச்சுவார்த்தையின் போது புலிகள் எழுப்பலாம்.

நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது;-

விடுதலைப் புலிகள் இயக் கத்துடன் நடத்தப்படும் பேச் சுவார்த்தைகள் ஆக்க பூர்வ மானவையாகவும் சிறந்த இலக்கினைக் கொண்டவை யாகவும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடை பெறுப வையாகவும் இருத்தல் வேண் டும்.

புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்து வது தொடர்பாக அரசாங்

(10ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப சமாதானம் வெகு தூரத்தில் எண்டு சொல் லுங்கோ......!

## படையினர் மீது தொடர்ந்து ஷெல் வீச்சு!

கொழும்பு, செப். 5

விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நண்பகல் வெற்றி உறுதி ராணுவ நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ள படையினர் மீது ஷெல்களை ஏவினார் கள்.

அதனை படையினர் முறிய டித்ததாக இராணுவப் பேச் சாளர் பிரிகேடியர் சரத்முன சிங்கா நேற்று பத்திரிகையா ளர்களுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை புளியங்குளத் துக்கு கிழக்கேயுள்ள பகுதி யில் நேற்று முன்தினம் படை யினர் 2 புலிகளைச் சுட்டுக் கொன்றார்கள் என்றும் அவர் கூறினார். (இ-4)

## போர் நிறுத்தத்துக்கு அரசும் இணக்கம்?

கொழும்பு, செப். 5

போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதை முன்னிட்டு இன்றும் நாளையும் ஒக்ரோபர் 10 ஆம், 11 ஆம் திகதிகளி லும் போர் நிறுத்தம் செய்வதற்கு அரசும் விடுதலைப் புலி ளும் இணங்கியுள்ளனர் என ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உதவி அரச அதிபரின் வாகனம் மன்னாரில் கடத்தப்பட்டது!

மன்னார், செப். 5

மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட்டான் உதவி அர சாங்க அதிபரின் உத்தியோகபூர்வ வாகனம் கடந்த புதன் காலை 10 மணியளவில் மன்னாரில் வைத்து சாரதியுடன் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உடுவில் பகுதியில் ஆயுதம் மீட்பு எனத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 5

நேற்று முன்தினம் உடுவில் பகுதியில் மேற்கொண்ட தேடுதலின்போது வீடொன் றில் இருந்து ரி-56 ரகத்தைச் சேர்ந்த இயந்திரத் துப்பாக்கி ஒன்றையும், 2கைத்துப்பாக்கி களையும் படையினர் கைப் பற்றியதாக இராணுவப் பேச்சாளர் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (இ-4)

## 4 ஊர் காவலர்கள் அம்பாறையில் பலி!

### காவலரண்கள் மீது தாக்குதல்!!

அம்பாறை, செப். 5

கடந்த செவ்வாய் இரவு 11 மணியளவில் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஊத்துப்பட்டி என்னும் இடத்தில் அமைந் துள்ள காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சோதனை நிலையங்கள் அகற்றப்பட்டு வருகின்றன

யாழ்ப்பாணம், செப். 5

யாழ். நகர வீதிகளில் நெருக்கமாக அமைக்கப்பட்டி ருந்த சோதனைத் தளநிலை கள் கடந்த சில தினங்களாக அகற்றப்பட்டு வருகின்றன.

நாவலர் வீதி, றெயில்வே கடவைச் சந்தி, கந்தர்மடம் சந்தி, முலவைச் சந்தி, இரா

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME**

UNDP,
121A, Temple Road,
Jaffna.

**Post of House Keeper / Cook**

Applications are invited from suitable candidates who possess a minimum of 3 years experience in the relavant field.
A fair knowledge of English is essential.

Closing date: **On or before 12th Sept. 97.**

(49454)


# நோயாளர் பாதிப்பு

தென்பகுதியில் அரசாங்க மருந்தக வியலாளர்களும் துணை மருத்துவ சேவையினரும் சுகயீன லீவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக பிரதானஆஸ்பத்திரிகளில்அவசர சத்திர சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

# பயிற்சி வகுப்பு

யாழ். செயலக நலன்புரிக் கழகம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவிருக்கும் பொது எழுதுவினைஞர் சேவை II ''அ'' பிரிவு பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் உத்தியோகத்தர்களின் நலன் கருதி ஒரு பயிற்சி வகுப்பை செயலக பயிற்சி அறையில் கடந்த 29 ஆம் திகதி முதல் நடத்தி வருகின்றது.

இவ்விரிவுரைகளை யாழ். விசேட அடையாள அட்டைப் பிரிவு கருத்திட்ட ஆணையாளர் ரீ. திருலிங்கநாதனும் நிர்வாக உத்தியோகத்தர் வே. வீரபத்திரபிள்ளையும் நடத்தி வருகின்றனர். (இ-100)

# வாகன வரிப்பணம்

நவாலி, செப். 5

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்தில் இம் மாதம் முதல் மோட்டார் வாகனங்களுக்கான 96 ஆம், 97ஆம் ஆண்டுக்குரிய வரிப்பணங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. (இ-100)

# வீதியைத் திருத்தக் கோரிக்கை

நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருக்கும் நவாலி முருகமூர்த்தி பிரதான வீதியை உடன் திருத்தித் தருமாறு நவாலி அந்திரான் முருகமூர்த்தி பரிபாலன சபையினர் சண்டிலிப்பாய் பிரதேச செயலரை மகஜர் மூலம் கேட்டுள்ளனர். (இ-100)

# இறைச்சி விலை குறைக்கக் கோரிக்கை

குருநகர், செப். 5

குருநகரில் இயங்கிவரும் இறைச்சிக்கடைகளில் மாட்டு இறைச்சி விலையைக் குறைக்கக் கோரியும், ஞாயிறு தினங்களில் இறைச்சிக் கடைகளை காலை வேளைளில் நேரத்துடன் திறக்கக் கோரியும் குருநகர் பகுதி மக்கள் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரியிடம் கடந்த வாரம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். (ஐ-51)

# மயானத்துக்கு மடம்

நவாலி, செப். 5

நவாலி கொத்துக்கட்டியிலுள்ள இந்து மயானத்துக்கு தங்கு மடம் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரி நவாலி முருகானந்தா சன சமூக நிலையம் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும், யாழ். அரச அதிபருக்கும் மகஜரொன்றை சமர்ப்பித்துள்ளது. (இ-100)

# யாழ். கைப்பணி பொருள்கள் திருமலைக்கு அனுப்பப்படும்

நவாலி, செப். 5

யாழ்.பிரதேச செயலக மரவேலைப் பயிற்சிப் பாடசாலையில் தயாரிக்கப்பட்ட பல அழகிய கைப்பணிப் பொருள்கள் இன்று திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

வடக்கு—கிழக்கு மாகாண சிறுகைத்தொழில் திணைக்களத்தினால் எதிர்வரும்9ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள கைத்தொழில் கண்காட்சியில் இப்பொருள்கள் வைக்கப்படவுள்ளன.

பனை, தென்னை என்பவற்றிலிருந்து பெறப்படும் மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இப்பொருள்கள் நேற்று யாழ்ப்பாண பிரதேச செயலர் அலுவலகத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (ஐ-100)

# பஸ்சேவை

யாழ். பஸ் நிலையத்திலிருந்து பளைக்குச் செல்லும் பகல்நேர பஸ்சேவை நேரம் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பகல் 2—30 மணிக்கு யாழ். பஸ்நிலையத்திலிருந்து புறப்பட்ட பஸ் கடந்தமுதலாம்திகதிதொடக்கம் 3-00 மணிக்குப் புறப்படுகிறது.

இப் பஸ் பளையில் தரித்துநின்று மறுநாள் காலை 7-30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும். (இ-117)


# போட்டோ பிரதி

புதிய சேவை ஆரம்பம்!

உங்கள் தேவைகளுக்கேற்ப போட்டோ பிரதிகளை சிறந்த முறையில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்;

**'சந்திரன் பன்சி பலஸ்'**
**(கண்ணன் கடை)**
நவாலி வீதி,
மூத்தநயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

★ அதிக எண்ணிக்கையில் பிரதிகளை பெறுவோர்களுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

(47415)



# தேவை - தளபாடங்கள்

நல்ல நிலையில் உள்ள பாவித்த காரியாலய, வீட்டுத் தளபாடங்கள் உடனடியாக தேவைப்படுகின்றது.

**UNDP**
**121A, Temple Road, Nallur.**

(49452)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் துரைச்சாமி ஆறுமுகதாசன்

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்,
நீர்ப்பாசனத் திணைக்களம்)

பிறப்பு: **15 - 03 - 31**
இறப்பு: **06 - 08 - 97**

அன்பின் மணிவிளக்கே!
ஆருயிர்த் தெய்வமே!
தந்தையாகி நின்று – எமை
வளர்த்த ஆசானே
திங்களொன்று ஆனதையா
சென்ற இடம் தெரியவில்லை
எப்போது உமைக் காண்போம்
இறைவன் திருவடியில்.

எமது குல தெய்வத்தின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் அளித்து பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வ நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் (05 - 09 - 97) இன்று வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

ஆண்டா வளவு,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(சி/1482)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராசலிங்கம்

[ஈழநாடு நிருபர்]

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருநெல்வேலி 61, குமாரசாமி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா இராசலிங்கம் 04-09-97 வியாழக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும், நிர்மலா, காண்டீபன், பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேஸ்வரி (பூமணி), இராசமணி, இராசசிங்கம், இராசநாயகம், புஸ்பம், செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05-09-97) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு திருநெல்வேலி பாற்பண்ணை மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பகீரதன்
(மகன்)

61, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
திருநெல்வேலி.

(49458)

## திருமதி நாகரெத்தினம் முத்துக்குமாரசாமி

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகரெத்தினம் 03-09-1997 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமியின் (கிராம உத்தியோகத்தர்) மனைவியும், திரு. மு. மகாதேவா (கடலக பொறியியலாளர், கடற்றொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்), குமரகுருபரன் (பொறியியலாளர், டயாமி ரெலிகொம்யுனிகேசன் கொழும்பு) நவமணி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசகுமாரி, (ஆசிரியை, நல்லூர் சாதனா பாடசாலை), தர்மினி, நவரெத்தினம், லோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமையன்று (06-09-07) இல. 16, ஒலிவ் வீதி மட்டக்களப்பில் நடைபெறும்.

தகவல்:
மு. மகாதேவா
மகன்

83/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(49431)

## தருமலிங்கம் குஞ்சரம்மா

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் எட்டியாந் தோட்டையில் வசித்த வருமாகிய தருமலிங்கம் குஞ்சரம்மா (14-08-97) வியாழக்கிழமை எட்டியாந் தோட்டையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, திருஞானசம்பந்தன், நாகராணி ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வரட்னம், உதயகுமாரி பாலகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், சசிகலா, கோகுலன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எட்டியாந் தோட்டையில் (14-08-97) இல் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள் – மருமக்கள்

வேம்படி,
காரைநகர்.

(49451)


**BOSCO**
**INSTITUTE**
**25, Racca Road.**
**SPOKEN ENGLISH**
By, **BRITTO**
பிரிவு-i – **05—09—97**
Mon Fri. 4. 30
பிரிவு-ii - **06—9—97**
Sat, Sun- 3
**SPOKEN SINHALA**
By. **தர்சினி**
**ஆரம்பம்:**
**06-09-97**
Sat, Sun- 3-4
(49449)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயானா-பெய்த் மரணம் சதிச் செயல்;

# அரபு நாடுகள் குற்றச்சாட்டு!

## இனவெறி என்கிறார் கடாபி! பிரிட்டிஷ் அரசு மறுப்பு!

லண்டன், செப். 5

பிரிட்டிஷ் இளவரசி டயானா, அவரது நண்பரான எகிப்திய கோடீஸ்வரர் டோடி அல்பெய்த் ஆகியோரின் மரணங்களின் பின்னணியில் சதித்திட்டம் இருப்பதாக அரபு உலகில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கார் விபத்தில் டயானாவுடன் பலியான அவரது நண்பர் டோடி அல்பெய்த் எகிப்து நாட்டைப் பாரம்பரியமாகக் கொண்ட ஓர் இஸ்லாமியராவார். அவரது மரணம் குறித்து எகிப்திலும் ஏனைய சில அரபு நாடுகளிலும் குற்றச்சாட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

டயானாவும் டோடி அல்பெய்த்தும் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு உளவுத் துறையினரால் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று லிபியத் தலைவர் கேணல் முஹமட் கடாபி குற்றஞ்சாட்டியுள்ளார். அரபு உலகத் தலைவர் ஒருவரிடம் இருந்து வெளிப்படுத்தப்பட்ட முதலாவது குற்றச்சாட்டு இதுவாகும்.

மரண தண்டனையை ஒழித்து விட்டதாகக் கூறும் அரசுகள் ஓர் இளவரசி அரபு மனிதர் ஒருவரைத் திருமணம் செய்யக்கூடும் என்ற அச்சத்தினால் அவர்களைக் கொன்றுவிட்டன. பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு உளவுத் துறையினர் விபத்தை ஏற்பாடு செய்து வெறுக்கத்தக்க குற்றமிழைத்து விட்டனர். இது இஸ்லாத்துக்கும், அரேபியருக்கும் எதிரான நடவடிக்கை; மதம் சார்ந்த, இனம் சார்ந்த வெறியே இப்படுகொலைகள் என்று கடாபி கூறியுள்ளார்.

ஈரான் அதிபர் சதாம் ஹுசேய்னின் மகனால் நடத்தப்படும் 'உதே' என்ற பத்திரிகை இளவரசி டயானா அரசியலில் தலையிட்டதால் பிரிட்டிஷ் உளவுத்துறையினரால் படுகொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

300 ஆண்களுக்கு முன்னர் பிரிட்டனில் நடந்த உள்நாட்டுப் போரில் ஒலிவர் ஹம்பெல் என்ற நாடாளுமன்றவாதியால் பிரிட்டிஷ் மன்னர் தோற்கடிக்கப்பட்டதை விட அதிகமாக இளவரசி டயானா அரசசிம்மாசனத்தை உலுக்கி விட்டார் என்றும் அதற்காகவே அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றும் கெய்ரோவில் வெளியாகும் 'அல் அஃரம்' என்ற பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மரணங்கள் தொடர்பான லிபிய அதிபர் கடாபியின் குற்றச்சாட்டை ''முட்டாள் தனமானது'' எனக் கூறி பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

டயானாவின் மரணத்தில் சதி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எதையும் நிரூபிக்கும் சான்றுகள் எதையும் எவரும் இதுவரை வெளியிடவில்லை என்று செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

பிரபலமானவர்களின் மரணங்களைத் தொடர்ந்து இத்தகைய சதிக் குற்றச்சாட்டுகள் கிளப்பப்படுவது வழமையானதே என்றும் சில வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பிலிப்பீன்ஸ் விமானம் மறைவு

5 பொலீஸாருடன் சென்ற பிலிப்பீன்ஸ் நாட்டு விமானம் ஒன்று காணாமற் போயுள்ளது.

அந்த விமானத்துக்கு என்ன நடந்தது என்ற தகவல் கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். விமானத்தைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### உலக அரங்கில்

## இந்திய இராணுவத்துக்கு நவீன ஆயுதங்கள்

இந்தியாவின் ஆயுதப் படைகளுக்கு இன்றைய உலகில் உள்ள மிக நவீன ஆயுதங்கள் வழங்கப்படும் என்று பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

எமது நாட்டின் பாதுகாப்புக்காக ஆயுதப் படைகளுக்கு நவீன தொழில் நுட்பம் அவசியமாக உள்ளது. எனவே தான் படையினருக்கு நவீன ஆயுதங்களை வழங்கும் தேவை ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார், (ஐ)

## 'டயானா ரோஜா தினம்' பிரகடனம் செய்யக் கோரிக்கை

இளவரசி டயானாவின் பிறந்த தினமான ஜூலை முதல் திகதியை ஆண்டு தோறும் அவரது நினைவாக ''டயானா ரோஜா தினம்'' எனப் பிரகடனம் செய்ய வேண்டும் என பிரிட்டிஷ் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மிக்கேல் பப்ரிகென்ற் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆண்டு தோறும் விசேட ''டயானா ரோஜா மலரை'' எல்லோரும் வாங்கி அவரை நினைவு கூர்வதுடன் அதன் மூலம் சேகரிக்கப்படும் பணம் தரும காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## கொமோரோ அரச துருப்புக்கள் அன்ஜோன்தீவில்தரையிறக்கம்!

மொரோனி, செப். 5

இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள கொமோரோ நாட்டு துருப்புக்கள் அதன் அன்ஜோன் என்ற தீவில் தரையிறக்கப்பட்டுள்ளன.

கொமோரோ தீவுகளில் ஒன்றான அன்ஜோன் (ANJOUAN) தீவில் இடம் பெற்றுவரும் கிளர்ச்சியை அடக்குவதற்காகவே கொமோரோ துருப்புக்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுயாட்சி கோரும் அன்ஜோன் தீவில் அமைதி நிலை நாட்டப்பட்டிருப்பதாக கொமோரோ அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆனால் அங்கு இன்னமும் சண்டை இடம் பெற்று வருவதாகவும் —

உயிர்ச் சேதங்கள் குறித்து விவரங்கள் தெரியவில்லை என்றும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (ஐ)

# ஆயிரக்கணக்கான மக்கள் லண்டனுக்கு படையெடுப்பு

## இறுதிச் சடங்கிற்கு விரிவான ஏற்பாடு

லண்டன், செப். 5

மறைந்த இளவரசி டயானாவுக்கு அஞ்சலி செலுத்த பிரிட்டனிலும் உலகின் பல பகுதிகளிலும் இருந்து பல்லாயிரக் கணக்கானோர் லண்டன் நோக்கி வந்து குவிவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சனியன்று நடைபெறவுள்ள இறுதிச் சடங்கில் சுமார் 20 லட்சம் மக்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இறுதி ஊர்வலம் செல்லும் பாதை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

புனித ஜேம்ஸ் மாளிகையில் இருக்கும் டயானாவின் பூதவுடல் மத்திய லண்டன் வழியாகவே அவரது சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லப்படும், இறுதிச் சடங்குகளை மக்கள் பார்ப்பதற்கு வசதியாக லண்டன் ஹைட் பூங்காவில் பிரமாண்டமான தொலைக் காட்சிகள் பொருத்தப்பட்டுள்ளன.

டயானாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த மக்கள் மிகவும் ஆர்வமாக இருப்பதால் இறுதி ஊர்வலம் தொடர்பான ஏற்பாடுகளை பக்கிங்ஹாம் அரண்மனை விரிவுபடுத்தியுள்ளது.

டயானாவின் மரணத்தை ஒட்டி வந்து குவியும் அனுதாபச் செய்திகளால் தாங்கள் புளகாங்கிதம் அடைந்திருப்பதாக அரச குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

## சித்திரம், சுவரொட்டி இறுதிப்போட்டிமுடிவுகள்

வலயம் — 1க்கு உட்பட்ட கோட்டங்களுக்கு இடையே 'யுனெஸ்கோ' நிறுவனம் நடத்திய சித்திரம், கேலிச் சித்திரம், சுவரொட்டி ஆகிய போட்டிகளின் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம் வருமாறு:-

### சித்திரமும் கேலிச்சித்திரமும்

கீழ்ப்பிரிவு

★ 1 ஆம் இடம் — ச.விதூஷன்(புனிதஜோண்பொஸ்கோ வித்).

★ 2 ஆம் இடம் — தா. செஜீனா (புனிதஜோண் பொஸ்கோ வித்.)

★ 3 ஆம்இடம் — வீ.எஸ். செல்வரட்ணம் (சென். பற்றிக்ஸ் கல்லூரி).

மத்திய பிரிவு

★ 1 ஆம் இடம்—தர்ஷிகா - (கொக்குவில் இந்துக் கல்லூரி).

★ 2 ஆம் இடம் —அ. கரிகஜன் - (சென் .பற்றிக்ஸ் கல்லூரி).

★ 3 ஆம் இடம்—வ. குணரஞ்சினி - (வேம்படிமகளிர் கல்லூரி).

மேற் பிரிவு

★ 1 ஆம் இடம் — இ. யுகேதர் - (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

★ 2 ஆம் இடம்-வை. செந்தூரன்- (கொக்குவில் இந்துக் கல்லூரி).

★ 3 ஆம் இடம் — ஜே. என். நிலோஷன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

### சுவரொட்டிப் போட்டி

கீழ்ப்பிரிவு

★ 1 ஆம் இடம்— செ. யஸ்மின் சுகன்யா - (திருக்குடும்ப கன்னியர்மடம்).

★ 2 ஆம் இடம் — ப. காயத்திரி - (புனித ஜோன் பொஸ்கோ).

★ 3 ஆம் இடம் — ச. பிரியங்கரி - (புனித ஜோன் பொஸ்கோ).

மத்திய பிரிவு

★ 1 ஆம் இடம் — சி. காணமுறுதா- (வேம்படி மகளிர்கல்லூரி).

★ 2 ஆம் இடம் — சி. பிரவீனா - (திருக்குடும்பகன்னியர் மடம்).

★ 3 ஆம் இடம் — இ.தனராஜன் - (கரம்பொன் சண்முகநாதன் வித்.)

மேற்பிரிவு

★ 1 ஆம் இடம் — ர. பிரகாஷ் - (செங்குந்த இந்துக் கல்லூரி).

★ 2 ஆம் இடம் — அமலதாஸ் டொறின் மரியற் - (திருக்குடும்பக்கன்னியர் மடம்).

★ 3 ஆம் இடம் — எ. எஸ். பற்றிக்ஸ் — (சென். பற்றிக்ஸ் கல்லூரி).


உ

தெல்லிப்பழை அருள்மிகு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

மகா கும்பாபிஷேக

விழாவை முன்னிட்டு

இன்றைய நிகழ்ச்சிகள்




காலம்:- 05 - 09 - 97

வெள்ளிக்கிழமை

காலை: 7–00 மணி முதல்

தூபிஸ்தாபனம், கங்காபூஜை, தீர்த்த சங்கிரகணம், சூர்யாக்னி சங்கிரகணம், தான்யஸ்தாபனம், பரிவார கும்பஸ்தாபனம்

மாலை: 2–00 மணி

மிருத் சங்கிரகணம் அங்குரார்ப்பணம் ரட்சாபந்தனம், கலாகர்ஷணம், கும்பயாக சாலைப் பிரவேசம், யாக பூஜை தீபஸ்தாபனம்

மாலை 4–30 மணி முதல்

யந்திரஸ்தாபனம், அஷ்டபந்தனம் தைலாப் பியங்கம்

06 - 09 - 97 சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்.

நிர்வாக சபை,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

தெல்லிப்பழை.

(ஐ-1470)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

HONDA C.50 மோட்டார் சைக்கிள், Minor 1000 CAR. மற்றும் புதிய 90 அம்பியர் பற்றறி, புதிய கார் டயர், ரீயூப்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 55, இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். [40435]

### தவறிவிட்டது

சின்னப்பு அன்னலட்சுமி என்பவரின் இலகடி கிழக்கு, காரைநகர் என விலாசமிடப் பட்ட தேசிய அடையாள அட்டை மானிப்பாய் - கட்டுடைக் கிடையில் 25-8-97 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 6 ஆம் கட்டை, கட்டுடை, மானிப்பாயில் ஒப்படைக்கவும். [49437]

### கைமாறிவிட்டது

Dr. விக்கினேஸ்வரா வீட்டில் பெண்கள் லுமாலா துவிச்சக்கர வண்டி ஒன்று தவறுதலாக கைமாறப்பட்டுள்ளது, மாறி எடுத்தவர்கள் தயவுசெய்துகீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். Dr. விக்கினேஸ்வரா, 89, பிறவுண் வீதி, நீரரவியடி, யாழ்ப்பாணம். [49438]

### காணவில்லை

க. இராசேஸ்வரன் என்பவரது வீட்டுவளர்ப்பு நாய் (பொமனேரியன் பிறவுண் நிறம்) காணாமற் போய் விட்டது. இதனைக் கண்டவர்கள் தயவு செய்து பின் வரும் முகவரியில் ஒப்படைக்கவும். க. இராசேஸ்வரன், இல. 134, ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். [49387]

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆரம்பத்தில் இருந்து சிறு குறாப்பாக ஆங்கிலம் கதைக்க பயிற்சி கொடுக்கப்படும். ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். [49426]

### தேவை

பகல் முழுவதும் பிள்ளையைக் கவனிக்கக் கூடிய பண்பான, ஒழுக்கமான பெண் உதவியாளர் தேவை. தொடர்பு: 52, மருதடி வீதி, நல்லூர். [சி/1480]

### அறை வாடகைக்கு

யாழ். பகுதியில் அறைகள் நிரந்தர வேலை பார்ப்பவர்க்கு (30 வயதிற்கு மேற்பட்டவர்கட்கு மட்டும்) வாடகைக்கு உண்டு. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [49427]

### கணக்குப்பதிவு

வர்த்தக நிலையக்கணக்குகள் கணக்கியல் படித்தவரால் எழுதி இறுதிக்கணக்குகள் தயாரித்துக் கொடுக்கப்படும். பகுதி நேரமாகவோ முழுநேரமாகவோ செய்யலாம். தொடர்பு:S.K. Pillai, சுவாமியார் குருகுலம், 20, செம்மணி வீதி, (முத்திரைச் சந்தையடி) நல்லூர். [49406]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 29 — 11 — 1987

உதிர்வு: 16 — 09 — 1996

### செல்வி விஜேந்திரன் திவ்வியா

ஈன்றெடுத்த புகழ் காணுமுன் – நீ
இவ்வுலகை மறந்து மறைந்து விட்டாய்
ஈரம் காயாது என்றென்றும் எம் கண்ணில்
ஓராண்டானாலும் இறக்கவில்லைத் திவி உன்நினைவு

பாடசாலை வீதி,
நாவற்குழி.

பிரிவால் துயருறும்:
சிவராஜா குடும்பம்.

(4940₉)

## கண்ணீர் அஞ்சலி

சைவசமய வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவரும், தேவஸ்தான மணிக்கோபுரத்தை நிர்மாணித்ததுடன் இதர திருப்பணிகளுக்கு நிதி உதவிகளை உவந்தளித்தவரும், முன்னாள் பொருளாளர்களில் ஒருவருமான

### உயர்திரு. கந்தையா பேரம்பலம்

அவர்களின் அகாலமரணத்தைக் கேட்டுத் துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரியப்படுத்துகின்றோம்.

பரிபாலனசபை,
ஞான செல்வ விநாயகர்
தேவஸ்தானம்,
புதுவீதி, கொய்யாத்தோட்டம்

(49302)

## COLLEGE OF COMMERCE

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

### கலை, வர்த்தகம்

## A/L 97

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு

## DAY CLASS

துரித மீட்டலும் – வினாவிடையும்

ஆரம்பம்: **06-09-1997**


சனி காலை 8 30 மணி

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| கணக்கியல் | திரு. வன்னியசிங்கம்<br>திரு. முகுந்தன் |
| வர்த்தகம் | திரு. பசில் |
| புள்ளிவிவரவியல் | திரு. தவசேகர் |
| பொருளியல் | திரு. இராஜேஸ்வரன் |
| அளவையியல் | திரு. R. P. சர்மா |
| தமிழ் | திருமதி மீரா |
| இந்துநாகரிகம்<br>இந்துசமயம் | திரு. ஜோதீஸ்வரன் |
| நாடகமும் அரங்கியலும் | திரு. கந்தவேள் |
| புவியியல் | திரு. இக்னேசியன் |
| கிறிஸ்தவம் | திரு. றெஜினோல்ட் |
| வரலாறு | திரு. றெஜி |

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
புதன் தவிர்ந்த ஏனைய கிழமை நாள்களில் காலை 8-30 முதல் 12-30 வரை நடைபெறும்.
தனிப்பாடங்களுக்கும் அனுமதிகள் வழங்கப்படும்.

(47413)



நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(ஆவணி மாதம் **07-09-1997** ஞாயிற்றுக்கிழமை)

அம்பிகை அடியார்களே!

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான ஈசுர வருஷம் ஆவணி மாதம் **22**ஆம் நாள் (**07 - 09 - 1997**) ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரமும் பூர்வபக்ஷமும் கூடியுள்ள காலை 9-30 மணி தொடக்கம் 10-30 மணிவரையுள்ள துலாலக்கின சுபவேளையில் ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற அன்னையின் திருவருள் கூடியிருப்பதால், அடியார்கள் பாலஸ்தாபன கிரியா காலங்களில் வருகை தந்து அம்பிகையை வழிபாடு செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கிரியாகால நிகழ்ச்சிகள் ஆவணி **20** ஆம் நாள்(**05-09-1997**) வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

**அறங்காவலர் சபை,**
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(49411)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. தம்பிப்பிள்ளை தம்பிராசா

(உரிமையாளர், நல்லூர் மார்க்கட் எரிபொருள் நிரப்பு நிலையம்)

தோற்றம்: **14 - 10 - 1923**

மறைவு: **20 - 08 - 1997**

20 - 08 - 1997 ஆம் தேதியன்று அமரத்துமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் திரு. தம்பிப்பிள்ளை தம்பிராசா அவர்களது வீட்டுக் கிருத்தியமும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (05-09-97) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

க. தேவகுருநாதன் (மருமகன்)
தே. சரோஜா (மகள்)
மற்றும் குடும்பத்தினர்.

142, ஆடியபாத வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(49433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வண்ணார்பண்ணை

## ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்

(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்)

இராஜகோபுர மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**7. 9. 97** ஞாயிறு காலை 6 மணி 41 நிமிஷம் முதல் 7 மணி 35 நிமிஷம் வரையுமுள்ள சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

**6. 9. 97** சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கிரியைகள் ஆரம்பம்.

- தர்மகர்த்தா சபை.

(49419)

மந்திகையில் மீண்டும்

## K. K. S. கிளினிக்

மந்திகை மருத்துவ மனைக்கு அருகாமையில், மீண்டும் K, K. S. கிளினிக் வைத்திய ஆலோசனை நிலையம் இன்று **05 - 09 - 1997** ஆம் திகதி மாலை 3மணிக்குத் திறக்கப்படவுள்ளது.

- நிர்வாகி.

மந்திகை. (49444)

யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதி

அருள்மிகு

அரசடி விநாயகர் ஆலயம்

## அலங்கார உற்சவம் - 1997

எமது ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் **05 - 09 - 97** வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும். தினமும் மாலை 3-00 மணிக்கு அபிஷேகம், 4-00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை, அதைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதி வலம் வருவார்.

**மங்கள இசை: குகன் குழுவினர்**

அனைவரும் வருக; விநாயகர் அருள் பெறுக,

- ஆலய பரிபாலனசபை.

சிறப்புற வாழ்த்தி வணங்குவோர்:

ஈ. எஸ். பேரம்பலம் சக நிறுவனம்,
50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(49423)

## குளிர்சாதனப் பெட்டி

பளை அரச வைத்திய சாலைக்கு ஜெனரேற்றரும், குளிர்சாதனப் பெட்டியும் விரைவில் கிடைக்கவுள்ளன.

பளைப் பகுதியில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களும் நலன்விரும்பிகளும் இணைந்து இவற்றைக் கொள்வனவு செய்து வழங்கவுள்ளதாக பளைப் பிரஜைகள் குழுத் தலைவர் ஆர். முனீஸ்துரைசிங்கம் தெரிவித்தார்.

(இ-117)

## சமையற் பாத்திரம்

வன்னியிலிருந்து தமது சொந்த இடங்களுக்கு மீளக் குடியேறிய வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 60 குடும்பங்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சமையற் பாத்திரங்களை வழங்கவுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளிலும் தலா ஏழு குடும்பம் வீதம் தெரிவு செய்யப்பட்டு அக் குடும்பங்களுக்கு சமையற் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக கழகச் செயலாளர் எம். கே. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

(இ-117)

ஈசன்

## கல்வி நிலையம் கோண்டாவில்

மீட்டல் வகுப்புகள்

★ இரசாயனவியல்

**திரு. றமேஸ்**

ஆரம்பம்:

**05 - 09 - 97**

வெள்ளி 4. 30 மணி p.m.

★ விலங்கியல்

**திரு. கெங்காதரன்**

ஆரம்பம்:

**10 - 09 - 97**

புதன் 2. 30 p. m.

★ பௌதிகவியல்

**திரு. குமரன்**

★ தாவரவியல்

**பிரபல ஆசிரியர்**

★ தூய. பிரயோக கணிதம்

**திரு. கருணா**

ஆரம்பமாகி விட்டன

★ மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

(49447)

# நிவாரணப் பொருள் இல்லை

தென்மராட்சி, செப். 5

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வைத்துள்ள குடும்பங்களுக்கு கடந்த ஏழு மாதங்களாக நிவாரணப்பொருள்கள் வழங்கப்படாமல் உள்ளதால் இக் குடும்பங்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் வழங்கப்பட வேண்டிய உணவு முத்திரைகள் இன்னமும் வழங்கப்படவில்லை எனவும்—

இதனால் நிவாரணம் எதுவும் இன்றி அவர்கள் கஷ்டப்படுவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## பருத்தித்துறையில் 'ஓசன் சக்ஸஸ்'

''ஓசன் சக்ஸஸ்'' கப்பல் சுமார் 654 மெற்றிக்தொன் பொருள்களை ஏற்றிக் கொண்டு நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

தனியார் வர்த்தகர்களுக்கான பொருள்களுடன் சீமெந்து உருளைக் கிழங்கு போன்ற பொருள்களும் வந்து சேர்ந்துள்ளன.

(ஐ - 109)

## வைத்திய அதிகாரி நியமனம்

நெல்லியடி, செப். 5

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியாக டாக்டர் கே. மயிலேறும் பெருமாள், வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-109)

## கூட்டுறவு பரிசோதகர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 5

வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கு கூட்டுறவுப் பரிசோதகர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 12பரீட்சார்த்திகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த என். நந்தகுமார் என்பவரும் மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருப்பதாக யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

(ஐ)

## தையல் பொருள் கண்காட்சி

புலோலி வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் தையற் பொருள் கண்காட்சியும், விற்பனையும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் சு. திருச்செல்வம் தலைமையில் நடைபெறும்.

இவ் வைபவத்தில், பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பி. எம். இம்மானுவேல், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி உட்பட பலர் கலந்து கொள்வர்.

(ஐ-109)

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## பிரார்த்தனை மண்டபம் திறப்பு விழா

**காலம்: 05 - 09 - 1997**

(மு. ப 6-52 - 8-40 (ப. நே)

**ஆசியுரை வழங்குவோர்:**

கல்லூரி மைந்தன்

திரு. க, சிவகுருநாதபிள்ளை
(சிரேஷ்ட விரிவுரையாளர், கணனிப் பிரிவு, லண்டன் பல்கலைக்கழகம்)

திரு. எஸ். கே. தங்கவடிவேல்
(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)

திரு. வ. செல்லத்துரை
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சபை)

திரு. பொ, இராமலிங்கமூர்த்தி
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

இளைப்பாறிய முன்னாள் இந்து மாமன்றப் பொறுப்பாசிரியர்கள்

திரு. பொ. கந்தையா, திரு. த. தம்பித்துரை, செல்வி ந. பாக்கியம்

சிறப்புச் பொற்பொழிவு

**கவிஞர் காரை.மு. பா. அருளானந்தம்**

செயலாளர்,

(49440) **இந்து மாமன்றம்**

விராட் விஸ்வப்பிரம்மனேநம

# நினைவஞ்சலி

| 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு |
|---|---|
|  |  |
| அமரர் | திருமதி |
| **திரு. V. S. சபாரத்தினம் பத்தர்** | **சுந்தரம்மா சபாரத்தினம்** |
| தோற்றம்: 07-07-1924 மறைவு: 16-09-1996 | தோற்றம்: 08-10-1928 மறைவு: 10-06-1995 |

திதி: 05-09-1997

தங்களுக்காக வாழாது எங்கள் எல்லோரது வாழ்விலும் ஒளியூட்டியவர்களே! நீங்கள் மண்ணை விட்டுப் போனாலும் எங்கள் மனதை விட்டுப் போகவில்லை விண்ணுலகு சென்றாலும் நீங்கள் விடிவெள்ளியாய் நின்றிருப்பீர்கள்.

உங்கள் ஆன்மா சாந்தி அடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(49363)

உ

மாவை. கொல்லங்கலட்டி

## ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்
## ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் உடனுறை ஸ்ரீமத்சிதம்பரேஸ்வர சுவாமி கோயில்
## பிராயச்சித்த விஞ்ஞாபனம்

மேற்படி ஆலயங்களின் பிராயச்சித்த அபிஷேகம் **7 - 9 - 97** ஞாயிறு காலை 6 மணிக்கும் 7 மணிக்கு மிடையில் நடைபெற்று தினசரி பூசை ஆரம்பமாகும்.

**5 - 9 - 97** வெள்ளிக்கிழமை விநாயக சதுர்த்தியை முன்னிட்டு மகா கணபதி ஹோமம் நடைபெறும்.

சிரமதானத்துக்கு பெயர் பதிந்தவர்கள் இன்றும் நாளையும் 9 மணிக்கு மல்லாகம் பிள்ளையார் கோயில் முன்றலில் வருகை தரவும்.

**சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்,**

அறங்காவலர்,

140, பருத்தித்துறை றோட்,
யாழ்ப்பாணம். (49429)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்
## மகா விஷ்ணு ஆலயத்தின்
## கட்டட நிதிக்கான
## அதிர்ஷ்ட இலாபச் சீட்டின்
## அதிர்ஷ்ட எண்கள்
### வருமாறு

1 ஆம் பரிசுக்கான இலக்கம் — 0942̣6
2 ஆம் ,, ,, — 09203
3 ஆம் ,, ,, — 03472
4 ஆம் ,, ,, — 03940

மற்றும் 3 ஆறுதல் பரிசுகளுக்கான இலக்கங்கள்
**06554, 04745, 03980**

ஆலய பரிபாலன சபையினர்

இல. 157, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (49404)

## வாழ்த்துகின்றோம்
### கோண்டாவில் சி.சி த.க. பாடசாலையில்

1995 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய

செல்வன் இராமையா ஹேமபாலா – 137 புள்ளிகள்
செல்வி தாரணி சிவலோகநாதன் – 124 புள்ளிகள்
செல்வன் சண்முகலிங்கம் ருகுணதாஸ் - 109 புள்ளிகள்

மாணவர்களையும், பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் உதவிய அனைவரையும் உளமார வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்,
யா/கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை,
(49396)

## மங்களகரமான திறப்பு விழா
### இராஜன் இசையகம்
### 05 - 09 - 1997 வெள்ளிக்கிழமை

இன்று காலை **9-30** தொடக்கம் **10** மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில் எமது தொழில் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

**இராஜன் இசையகம்,**
198. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (49434)

## விற்பனைக்கு

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பாவனையில் இல்லாத இசுசு 26/8545 இலக்கமுடைய லொறி விற்பனைக்குண்டு.

மேற்படி லொறியினை வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பார்வையிட்டு தங்களது கேள்வியினை 1997.09.25-ம் திகதிக்கு முன் பொது முகாமையாளர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

செ. சிவலோகநாதன்,
(தலைவர்)
வேலணை பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(49425)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, செப். 5

இந்து இளைஞர் பேரவையிலும், இந்து சமய நிறுவனங்களிலும் இணைந்து தொண்டாற்றிய தொண்டர்களைக் கௌரவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேரவையின் தலைவர் வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும்.

இதில் சகல நிறுவனங்களினதும் நிர்வாகசபை உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-30)

## ச. ச. நிலையத்துக்கு நிதி உதவி

நெடுந்தீவு, செப். 5

நெடுந்தீவு கிழக்கு சன சமூக நிலைய புனரமைப்புக்கென யாழ். அரசாங்க அதிபரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செல்வுத் திட்ட நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (ஐ-111)

## 3 ஆம் கட்ட மண்எண்ணெய் விநியோகம்

உரும்பிராய், செப். 5

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மூன்றாம் கட்டமாக பங்கீட்டு அட்டைக்கு ஒன்றரை லீற்றர் வீதம் மண்எண்ணெய் தற்போது வழங்கப்படுகிறது. (ஐ-154)

## குழுச் சாரணர்

கொழும்புத்துறை, செப். 5

குழச்சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. சகல குழுச் சாரணத் தலைவர்களும் இக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-30)

## தென்னை உற்பத்தி குறித்து பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, செப். 5

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் தென்னம் பயிர்ச் செய்கையை அதிகரிக்கும் பொருட்டு இப்பிரதேச பாடசாலைகளிலும் கிராமங்களிலும் பயிற்சி வகுப்புகள் பளைப் பிரதேச தென்னை அபிவிருத்தி அலுவலர் க. தனிநாயகத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சி வகுப்பில் ''வரட்சியிலிருந்து தென்னம் பயிர்களைப் பாதுகாப்பது'' பற்றியும் ''தென்னைக்கு பிற காரணிகளால் ஏற்படும் தாக்கங்களும் அதற்கான தடுப்பு முறைகளும்'' பற்றியும் நேரடி கண்காட்சி விளக்கங்கள் மூலம் தெளிவாக பயிற்சியளிக்கப்படுகிறது. (இ-117)

## பாராட்டி வாழ்த்துகிறோம்
### நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை – 1995

பாடசாலை கல்வியூட்டல் முறை மூலம் சித்தியெய்திய

| | |
|---|---|
| உதயபாரதி லிங்கம் தமிழ் மாறன் | புள்ளிகள் 131 |
| ஸ்ரீரங்கா அம்பிகைபாகன் | புள்ளிகள் 116 |
| துவாரகா கந்தசாமி | புள்ளிகள் 108 |

ஆகிய மாணவர்களையும், இவர்களுக்கு வழிகாட்டியாகவிருந்து கற்பித்து உற்சாகமூட்டிய அதிபர், ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
**ஸ்ரீ கணேசகனிஷ்ட மகாவித்தியாலயம்.**

நயினாதீவு. (49439)

### கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய
## ஜெற்லைனேர்ஸ் விளையாட்டுக் கழகம்
### 27 ஆவது விழாவை முன்னிட்டு

கழகங்களுக்கிடையில் நடத்தும்

### 7 பேர் கொண்ட 12 ஓவர்

விலகல் முறையிலான மென்பந்து கிரிக்கற் சுற்றுப் போட்டி

விண்ணப்ப முடிவுத் திகதி: **10 - 09 - 97**

போட்டிகள் **13** ஆந் திகதி ஆரம்பமாகும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**S. செல்லத்துரை** (மாமா)
''தேநீர்க் கடை''.
92, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(49432)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



## ★ செல்வன் இ. மேகலன் ★

### 05 - 09 - 1997

யாழ்ப்பாணம், சாவகச்சேரி
இந்திரதாசன் விஜிதா தம்பதிகளின்
அருந்தவப் புதல்வன் மேகலன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (05 – 09 – 1997) டென்மார்க்கில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகவும் குதூகலமாகவும் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பப்பா, அப்பம்மா, மோகன் சித்தப்பா, முகுந்தினி (கனடா), நகுலினி (சாவகச்சேரி), வசந்தினி (டென்மார்க்), இந்துமதி (மல்லாகம்), மாமிமார் குடும்பத்தினர், மற்றும் சாவகச்சேரி அம்மப்பா, அம்மம்மா, அன்ரிமார், விசேந்திரன் மாமா அனைவரும் காளி ஆச்சி அம்பாள் கிருபையால் கல்வி வளம் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

சி. காளிதாசன்.
(அப்பப்பா)

687/28A, ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம். (49382)

★ உங்கள் பிள்ளைகள் ஊனமடையாது தடுப்பது உங்கள் கடமையே
★ போலியோவைத் தடுக்கும் சொட்டு மருந்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுங்கள்.

PolioPlus

## நாளை 6 ஆம் திகதி
## சனிக்கிழமை

உங்கள் பகுதி குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பிரிவிலுள்ள விசேட ¦நிலையங்களுக்கு 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை கூட்டிச் செல்லுங்கள்.

## மறந்துவிடாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

# மகா கும்பாபிஷேகச் சிறப்புமலர்

**05 — 09 — 1997**

## ஆலய தர்மகர்த்தா ஆசியுரை


சீரும் திருவும் பொலியும் சாவகச்சேரி நுணாவில் மேற்குப் பகுதியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்ற தாழையம்பதி எனும் திவ்விய திருத்தலத்தில் அடியார்கட்கெல்லாம் வேண்டிய வேண்டியாங்கு திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை துர்க்காதேவியின் ஆலயத்தில் பன்னிரண்டு வருடத்திற்கொருமுறை நடைபெற வேண்டிய கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

இவ்வாலயம் எமது மூதாதையர் சந்தனக்குருக்கள் அவர்கள் பரம்பரையினால் தொடர்ந்து பரிபாலிக்கப்பட்டுத் தற்போது எமது பரிபாலனத்தில் இருந்து வருகிறது. சாவகச்சேரி வாழ் மக்கள், இப்பகுதிச் செல்வந்தர்கள், வெளியூர் மக்கள், சென்ற ஆண்டுகளில் இடம் பெயர்ந்து வந்திருந்த அன்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பினால் ஆலயத்தை நன்னிலைக்கு உயர்த்த முடிந்தது.

அம்பிகையின் திருவருள் அடியார்களின்மனதில் பதிய அவர்கள் தாமாகவே அன்னையின் பணிக்கு உதவினார்கள். அதனால் புதிதாக மஹாவிஷ்ணு ஆலயம், வசந்தமண்டபம் என்பவற்றையெல்லாம் அமைத்துப் பிரதிஷ்டை செய்ய முடிந்தது. பொருள் இருந்தாலும் அதை உதவ மனம் வேண்டும். அத்துடன் இப்படியான பணிக்கு உதவுவதற்கும் பெரும்பேறு கிடைக்கும் பலனும் வேண்டும். இரண்டும் வாய்த்த அன்பர்கள் உதவிய பணம், பொருள் என்பனவற்றால் திருப்பணி நிறைவடைந்து, குடமுழுக்கு விழா நிகழ்வும் நிகழப்பெற்றது.

ஆலயம் வந்து வழிபடும் அடியார்கள், கொடைவள்ளல்கள், தொண்டர்கள் அனைவருக்கும் அம்பிகையின் திருவருள் கிடைக்க அன்னையின் பாதக்கமலங்களை வணங்கி வாழ்த்துகிறேன்.

பிரம்மஸ்ரீ ப, மகாகணபதிசர்மா
ஆலயதர்மகர்த்தா



மூலமூர்த்தி அன்னை துர்க்கை

## பிரதம சிவாச்சாரியார் ஆசியுரை

தென்மராட்சிப் பகுதியில் விளைவேலி தாழையம்பதி எனும் திவ்ய திருத்தலத்தில் வீற்றிருந்து அடியார்களுக்கு வேண்டிய வேண்டியாங்கு திருவருள் பொழிந்து கொண்டிருப்பவள் அன்னை பராசக்தி அருள் மிகு ஸ்ரீ துர்க்காதேவி.

அன்னை அம்பிகையின் திருவருட் பிரவாகம் சொல்லிலடங்கா; எழுத்திலடங்கா. அவளிடம் வைத்த நேர்த்திகள் தவறுவதில்லை; சரியாகவே அமையும்.

இத்தகைய தெய்வீகப் பெருமைமிக்க அன்னையின் ஆலயம் புனரமைக்கப்பெற்று இன்று குடமுழுக்கு விழா நடைபெறுகிறது. அத்துடன் அன்னையின் அண்ணனும் காத்தற் கடவுளுமான மகா விஷ்ணு மூர்த்தி அனந்த சயனத் திருமாலாக அமைந்து பிரதிஷ்டை செய்யப்படுவது அதி விசேடமாகும்.

அன்னையின் திருவருளோடு அழகுற ஆலயத்தை அமைத்துக் குடமுழுக்கு விழா நிகழ்த்த அரும்பாடுபட்டு உழைத்த தர்மகர்த்தா சிவஸ்ரீ மகாகணபதிசர்மா அவர்களும் திருப்பணிக்கு வாரிவழங்கிய கொடைவள்ளல்களும் திருவருட் பெருமைமிக்கவர்கள்; அன்னையின் பெரும்பேறு பெற்றவர்கள்.

இக்குடமுழுக்கு விழாவைத் தரிசிக்கும் அனைவருக்கும் அன்னையின் கடைக்கண்ணோக்கால் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு கிடைக்க வாழ்த்துகிறேன்.

என்றும் அன்னை அருள் பெறுக!

கிரியா கான கலாமணி,
சிவஸ்ரீ சி.சோமசுந்தரக் குருக்கள்,
பிரதம சிவாச்சாரியார்.

## ஆதீன முதல்வர் அருளாசி

சாவகச்சேரி அருள்மிகு துர்க்காதேவிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். சாவகச்சேரியில் வாழும் சைவப்பெருமக்களுக்கு அருள் பாலிக்கும் முகமாக அன்னை பராசக்தி துர்க்கை அம்மன் வடிவில் எழுந்தருளி இருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றாள். அம்பிகைக்கு நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தைக் காணக்கிடைப்பது முன்,னர் செய்த புண்ணியத்தின் பலனே.

இக்கும்பாபிஷேக நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறவும் அம்பிகையின் அருள் எல்லோருக்கும் கிடைக்கவும் எல்லா வல்ல அண்டசராசரங்களையுடைய அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்,
குருமஹாசந்நிதானம்.
திருஞான சம்பந்தர் ஆதீனம்
நல்லூர்.



இன்று புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்படும்அனந்தசயன தோற்றமுடைய மஹாவிஷ்ணு விக்கிரகம்

## கும்பாபிஷேக திருவருட் பேறு வாழ்வுக்கும் வளத்துக்கும் துணை நிற்கும்

தென்மராட்சிப் பிரதேசத்தில் எண்ணற்ற திருக்கோயில்கள் அடியார்களது நல்வாழ்வுக்கு அருள் சுரந்த வண்ணம் உள்ளன. அவ்வரிசையில் சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி தாழையம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் அருள்மிகு துர்க்கா தேவிக்குப் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நிகழ்வதைக் காண்பதற்கு எமக்குத் திருவருள் கிட்டியுள்ளது.

அம்பிகையே அனைத்து உயிரினங்களினதும் சக்தியாவாள். எனவே அவளை எம் வாழ் நாள் முழுவதும் ஆராதித்துப் பயன் பெற வேண்டும். இதற்கு எம்மை ஆற்றுப்படுத்தும் விதத்தில் ஆதீன தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா அவர்களது அரிய முயற்சியினாலும், அடியார்களது அனுசரணையோடும் இவ்வாலயத்தில் திருப்பணிகள் நிறைவேறியுள்ளன. ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

புதிதாக ஒருகோயிலை நிர்மாணிப்பதை விட ஏற்கனவே இருக்கும் ஓர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வது அதிக பலனைத் தரும் என்பது சாஸ்திர உண்மையாகும். இவ்வாலயத்தில் சிறப்பாக தென்மராட்சியில் முதன் முதலாக மகாவிஷ்ணுவின் அனந்த சயன மூர்த்தம் பிரதிஷ்டை செய்யப்பட விருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும்.

நித்திய. நைமித்திய பூஜைகளினால் அருட்சக்தி மிக விளங்கும் அம்பிகை இக்கும்பாபிஷேகத்தின் பின் கூடிய தெய்வீக சாந்நித்தியம் கொண்டு நல்லருள் பாலிப்பாள் என்பதில் ஐயமில்லை.

இக் கும்பாபிஷேக திருவருட்பேறு அனைவரது நல்வாழ்வுக்கும், வளத்திற்கும் என்றென்றும் துணை நிற்பதாகுக!

கும்பாபிஷேக வைபவத்தைத் தரிசித்து
ஸ்ரீ துர்க்காதேவியின் அருள் பெறுவோமாக!

ப, கோபாலகிருஷ்ணா ஐயர்
இந்து நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

**சிறீ விக்னேஸ்வரா களஞ்சியம்,**
148, கண்டி றோட்,
சாவகச்சேரி.

**குமரன் றேடேர்ஸ்**
119, கண்டி வீதி,
சாவகச்சேரி.

**முருகன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்**
முருகன் களஞ்சியம்,
முருகன் அரிசி ஆலை
கண்டி வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் சுகாதாரப் பிரிவில் சொட்டு மருந்து வழங்கும் இடங்கள்

யாழ்ப்பாணம், செப் 5

போலியோ நோயை முற்றாக ஒழிப்பதற்காக ஐந்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் நாளை சனிக்கிழமை சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் சொட்டு மருந்து வழங்கப்படவுள்ள நிலையங்களின் விவரம் வருமாறு:-

★ அச்சுவேலி அரசினர் வைத்திய சாலை.

★ புத்தூர் அரசினர் மத்திய மருந்தகம்.

★ வாதரவத்தை ஆரம்ப சுகாதார நிலையம்.

★ சிறுப்பிட்டி தாய்சேய் சிகிச்சை நிலையம்.

★ அச்செழு தாய் சேய் சிகிச்சை நிலையம்.

★ நீர்வேலி வடக்கு றோமன் தமிழ்க் கலவன் பாடசாலை.

★ நீர்வேலி தெற்கு தாய் சேய் சிகிச்சை நிலையம்

★ அரசினர் மத்திய மருந்தகம், உரும்பிராய்

★ ஊரெழு தாய்சேய் சிகிச்சை நிலையம்.

★ சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

★ மாதாகோயில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

★ சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலை, இருபாலை கிழக்கு.

★ கட்டப்பிராய் தாய் சேய் சிகிச்சை நிலையம்.

★ அரியாலை தாய் சேய் சிகிச்சை நிலையம்.

★ கலா மன்றம் திருநெல்வேலி (தாய் சேய் சிகிச்சை நிலையம்)

★ அரசினர் மத்திய மருந்தகம், கொக்குவில்.

★ கிராம முன்னேற்ற சங்க நிலைய மண்டபம் கொக்குவில் அரசினர் மத்திய மருந்தக மகப்பேற்று நிலையம் கோண்டாவில். (ஐ-15)

## விற்பனை நிலையம் திறப்பு

நெல்லியடி, செப். 5

செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, அங்குள்ள சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு அருகில், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய விற்பனை நிலையம் ஒன்றை திறந்து வைத்துள்ளது.

(ஐ-109)

## பொது இடங்களில் கள் விற்பனை

பொது இடங்களில் கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ள போதிலும் சிலர் அதனை மீறிச் செயற்படுகின்றனர். இதனால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

கோப்பாய் கிருஷ்ணன் கோயிலுக்கு அருகிலுள்ள இராசபாதை வீதிச் சந்தியில் மாலை வேளைகளில் இக் கள் விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

மதுவரி உத்தியோகத்தர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும் எனப் பொது மக்கள் கோரியுள்ளனர். (ஐ-152)

## உதவிப் பணம் பெறுவோரின் விவரங்கள் மீளாய்வு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அரசினரின் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் விவரங்களை மீளாய்வு செய்யும் பணிகள் ஆரப்பிக்கப்பட்டுள்ளன.

கீழ்க் குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர் பணிமனைகளில், உதவிப்பணம் பெறுவோர் தமது உலர் உணவு அட்டை, வறுமை நிவாரண முத்திரை, விசேட அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை போன்றவைகளை மீளாய்வு செய்யும் சமூக சேவை அலுவலரிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

6 ஆம் திகதி புலோலி வடககு கி. அ. பிரிவு.

8 ஆம் திகதி புலோலி மேற்கு கி. அ. பிரிவு.

9 ஆம் திகதி கற்கோவளம் கி. அ. பிரிவு.

12 ஆம் திகதி தும்பளை கிழக்கு கி. அ. பிரிவு.

13 ஆம் திகதி தும்பளை கி. அ. பிரிவு. (ஐ-109)

## அம்புலன்ஸ் வண்டி இல்லை

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்திய சாலையில் கடந்த ஒன்றரை வருடகாலமாக அம்புலன்ஸ் வண்டி இல்லை.

இதனால் அங்கு சிகிச்சை பெறவரும் அவசர நோயாளிகள், தனியார் வாகன உதவியுடன் வேறு வைத்திய சாலைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

## சமய சந்நிதிகளில்

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

நல்லூர் வெயிலுகந்த விநாயகர் கோயிலில் இன்று பிற்பகல் 2மணிக்கு சதுர்த்தி திருவிழா நடைபெறும். விசேட பூஜையைத் தொடர்ந்துவிநாயகர் வீதியுலா வருவார். (ஐ-30)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தியை ஒட்டி இன்று ஆயிரத்து எட்டு சங்காபிஷேகமும் மகேஸ்வர பூஜையும் நடைபெறும். மாலை 4 மணிக்கு சுவாமி வீதியுலா இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

நல்லூர் வடக்கு சந்திர சேகரப் பிள்ளையார் கோயிலில் சதுர்த்தியை ஒட்டிஇன்று காலை 7மணிமுதல் ஆயிரத்து எட்டு சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. பிற்பகல் திருவிழாவைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருவார்.

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி சந்திரசேகரப் பிள்ளையார்கோயிலில் இன்று மாலை 3.30 மணிக்கு அபரபட்சம் சதுர்த்தி திருவிழா நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் தினமும் தெய்வீகக் கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இந் நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருமதி பிராணேஸ்வரி சிதம்பரப் பிள்ளையின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'நவையறு காட்சி' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் ச. விநாயகமூர்த்தி உரையாற்றுவார். நாளை மறுதினம் ஞாயிறன்று 'கந்தவேள் கருணை' என்ற தலைப்பில் அருள்மொழி வாரிசு வ. குமாரசுவாமி ஐயர் உரையாற்றுவார்.

★ ★ ★

வண்ணார்பண்ணை வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய வருடாந்த விநாயகர் சதுர்த்தி திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் நடைபெற்று விநாயகர் உள்வீதி வலம் வருவார். (ஐ-4)

★ ★ ★

உரும்பராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று வந்த இலட்சார்ச்சனை இன்று பூர்த்தியடைகிறது. காலை 7 மணிக்கு பஞ்சமுக விநாயகர் வீதிவலம் வருவார். பிற்பகல் 2.30 மணிக்கு ஆவணிச் சதுர்த்தி திருவிழா இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு, வதரிபீட கன்றுளாடும் பிள்ளையார் கோயிலின் ஆவணிச் சதுர்த்தி இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்று மாலை 5 மணிக்கு விநாயகப்பெருமான் வெளி வீதி வலம் வருவார்.

## விளையாட்டுப் போட்டி

புத்தூர்க்கிழக்கு மத்திய சனசமூக நிலையமும் குருநாதர் சனசமூகநிலையமும் இணைந்து நடத்தும் ராஜன் பாலர் பாடசாலை விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாலர் பாடசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்கத் தலைவர் சு. கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

## மாகாணக் கல்வி அமைச்சுக்கு பட்டதாரிகள் சங்கம் கடிதம்

யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட இருக்கும் ஆசிரிய நியமனங்களில் வேலையற்ற பட்டதாரிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவிற்கு அனுப்பிவைத்த கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனேகமான பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதனைக் கருத்திற் கொண்டும், யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளைக் கருத்திற் கொண்டும் இந்த நியமனங்களை மேற்கொள்வது காலத்தின் தேவையாகும் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அறவழிப் போராட்டக் குழு விதவைப் பெண்களுக்கு உதவி

நெல்லியடி, செப். 5

வன்முறையால் பாதிக்கப்பட்டு உழைப்பாளர்களை இழந்துள்ள வடமராட்சிப் பகுதியிலுள்ள விதவைப் பெண்களின் நலன் கருதி அறவழிப் போராட்டக் குழுவின் வடமராட்சி பிரதேச செயலகம் சுயதொழில் வாய்ப்புக் கடன்களை வழங்கி வருகின்றது.

சுயதொழில் வாய்ப்புக் கடன்களைப் பெறவிரும்பும் விதவைப் பெண்கள் நெல்லியடி மகாவித்தியாலய வீதியிலிருக்கும் தமது பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இதன் தலைவர் வி. ஜி. தங்கவேல் தெரிவித்துள்ளார். (ஐ 109)

## நாவலர் வீதி முழுவதும் இன்னும் திருத்தப்படவில்லை

### போக்குவரத்துக்குச் சிரமம்

பெரும் எண்ணிக்கையானோர் பயணம் செய்யும் யாழ்ப்பாணம் நாவலர் வீதி குன்றும் குழியும் நிறைந்து மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

சமீப காலங்களில் இந்த வீதி திருத்த வேலைகள் கட்டம் கட்டமாக நடைபெற்ற போதும் முற்று முழுதாக வேலைகள் பூர்த்தியாக்கப் படவில்லை.

நகரின் முக்கிய வீதிகளில் ஒன்றான இந்த வீதியில் இடையிடையே சில பகுதிகள் மட்டுமே செப்பனிடப்பட்டன.

மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்த வீதி வாகனப் போக்குவரத்திற்கும், பாதசாரிகளுக்கும் பெரும் கஷ்டங்களை ஏற்படுத்துவதாக உள்ளது. (ஐ-111)

## அகங்காரத்தை அழித்து அருளும் ஓங்காரமூர்த்தி விநாயகன்

### இன்று ஆவணிச் சதுர்த்தி

இன்று விநாயகர் சதுர்த்தி விரதம் சதுர்த்தியில் ஆவணிச் சதுர்த்தி சிறப்புக்குரியது.

தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாத காரணத்தால் விநாயகர் என்றும் விக்கினங்கள் தீர்ப்பதனால்விக்கினேஸ்வரர் என்றும் கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்குவதனால் கணபதி என்றும் அழைக்கப்படும் பிள்ளையாருக்குரிய விரதங்களில் மிகச் சிறந்தது விநாயக சதுர்த்தி விரதம்.

ஆவணி மாதத்தில் வளர்பிறை நாலாம் நாள் வரும் இந்த சதுர்த்தி மிகவும் மகிமை வாய்ந்தது. இந்த விரதத்தை முறையாக அனுட்டித்தால் முத்திப்பேறு நிச்சயம்.

இன்று உபவாசமிருந்து பிள்ளையாரை நினைத்து அறுகம் புல்லினால் மாலை தொடுத்துச் சாத்தி, அறுகம் புல்லினால் அர்ச்சித்து விநாயகர் ஸ்தோத்திரங்களைப் பாராயணஞ் செய்தல் வேண்டும். பின்பு வெள்ளெருக்கு மலர்கள், வன்னி இலை கொண்டு பூஜை செய்து அடியார்களுக்கு அமுது செய்வித்து உண்ணலாம்.

விநாயகப் பெருமானின் திருமுகம் திருமாலையும், முக்கண் சிவனையும், நாபி நான்முகனையும், இடப்பாகம் சக்தியையும், வலப்பாகம் சூரியனையும் குறிக்கும். அவர் தரித்துள்ள பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும் துதிக்கை மறைத்தலையும் மோதகம் அருளளையும் குறிப்பனவாகும்.

ஸ்ரீ விநாயகப் பெருமானிடம் விலங்குத்தலையும் மனித உடம்பும் தேவர் பாதங்களும் திகழ்கின்றன.

### ஞானக் கதிர்

ஓங்கார மூர்த்தியாகவிளங்கும் விநாயகர் எமது அகங்காரம் நீக்கவே செய்வார். சிவபெருமான் முப்புரங்களை எரிக்கப் புறப்பட்ட போது தன்னை வணங்காதபடியால் தேரின் அச்சையே முறித்தவர் கணபதி.

கந்தப்பெருமான் வள்ளியை வேட்டருளப் புறப்பட்ட சமயம், தன்னை மறந்ததால் காரியம் கைகூடாமற் செய்து பின்பு தன்னைப் பணியவே திருமணத்தை முடித்து வைத்தவர் மூத்த விநாயகர்.

உலகம்தான் அம்மை அப்பர்; அம்மை அப்பரே உலகம் என்பதை மாம்பழத்தைக் காரணங் காட்டி உலகுக்கு உணர்த்திய பெருமைக்குரியவர் விநாயகர்.

**வாக்குண்டாம் நல்ல**
**மனமுண்டாம் மாமலரான்**
**நோக்குண்டாம் மேனி**
**நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனி**
**தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு**

இது ஔவையார் கூற்று. நல்ல வாக்கு சாதுர்யமும் நல்ல மனமும் நோயின்மையும் இலட்சுமி கடாட்சமும் கிடைக்க விநாயகப் பெருமானைப் பூப்போட்டு வணங்குதல் வேண்டும் என்கின்றார்.

விநாயகர் வழிபாட்டில் முற்கவர், பார்க்கவர், மதங்கர், வியாசர் முதலானோரும் சிறுத் தொண்டர், நம்பியாண்டார் நம்பிகள், காசியப்பர், ஔவையார் முதலானோரும் உய்தி பெற்றனர்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும் கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும் பருவமாய் தமது உள்ளம் பழுக்கவும் மண்ணுலகிற் பிறவிப் பணி தீர எண்ணிய கருமம் நிறைவேற விநாயகர் சதுர்த்தி விரதம் வழிவகுக்கும்.

ஆகவே கணபதியைக் கை தொழுது சதுர்விதபல புருஷார்த்தங்களைப் பெற்றுய்வோமாக.

— இராசையா ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மதுக் கொலைகள்

கலப்படம் செய்யப்பட்ட சாராயம், மட்டக்களப்புப் பகுதியில் நேற்றுவரை 60க்கும் மேற்பட்டோரைப் பலி கொண்டுள்ளது. அதனை அருந்தியதால் மேலும் நூற்றுக்கு மேற்பட்டோர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தக் கொடுமைக்கு காரணர்கள் யார் என்பது இன்னும் சரியாகக் கண்டறியப்படவில்லை; ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள மதுபான நிலையங்களில் விற்கப்பட்ட சாராயம் கலப்படம் செய்யப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது. மக்கள் உயிரை உறுஞ்சியுள்ள கலப்படம் எங்கே வைத்து, யாரால் செய்யப்பட்டது என்பது குறித்துத் தெளிவான தகவல் இல்லை.

அதனை யார் செய்திருந்தாலும் மக்களின் உயிருடன் விளையாடிய அந்தக் கொலைஞர்களைக் கண்டு பிடித்து, வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து, சட்டத்தின் கையில் கொடுத்துத் தண்டனை வழங்கவேண்டும்.

விசாரிக்கிறோம், விசாரிக்கிறோம்; விசாரித்தோம் இன்னும் கலப்படம் செய்தவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை; தொடர்ந்து விசாரிக்க உள்ளோம் என்று கூறி, வழமைபோலப் பொலிஸார் காலத்தைக் கடத்தி, விவகாரத்தைக் கைகழுவிவிட்டு மறந்துபோன காரியமாக்கிவிடக் கூடாது.

சாராயக் கலப்படத்தின் சூத்திரதாரிகள் யார்; வர்த்தக இலாபம் கருதி இதனைச் செய்தார்களா அல்லது அரசியல் பின்னணியுடன் அப்பாவிப் பொது மக்களை, தமது மக்களை கூண்டோடு கொல்வதற்குச் செய்யப்பட்ட சதியா என்பதைக் கண்டறிய விசேட புலனாய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதனைச் சாதாரண கலப்படக் குற்றம் என்று கருதி அரசும், அதிகாரிகளும் வழமையான அசமந்தத்தனத்தைக் கைக்கொள்ளக் கூடாது, மந்த கதியில் செயற்படக் கூடாது. இதனை அரசாங்கத்துக்கு விடப்பட்ட ஒரு சவாலாகக் கருதி, முனைப்புடன் செயற்பட்டு, கலப்பட விவகாரத்தின் பின்னணியைத் துருவித் துருவி ஆராய்ந்து சூத்திரதாரிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். தண்டிக்கவேண்டும்.

இந்தப் பேரெண்ணிக்கைக் கொலையின் பின்னால் உள்ளவர்கள், தாம் தப்பிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, அதிகாரிகளுக்குப் பணத்தைக் கறந்து—கையூட்டுக் கொடுத்து—விசாரணைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயலக் கூடும்.

சில சமயங்களில் அரசியல் செல்வாக்கு, அரசியல் தலையீடு என்பனவும் தலையெடுத்துக் குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு வழங்கலாம்.

ஆகையால் சாராயக் கலப்படம் குறித்து அரசு மிக அக்கறையுடன் விசாரணைகளை நடத்த வேண்டும்.

சாராயக் கலப்படத்தினால் இறந்தோர், ஆபத்து நிலையில் உள்ளோர் பற்றிய தகவல்களை நோக்கும் போது. மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் இந்த ஆபத்து மேலும் பரவக்கூடும் என்று தோன்றுகிறது.

எனவே மாவட்டத்திலுள்ள சகல சாராயக் கடைகளையும், மதுபான நிலையங்களையும் உடனடியாக மூட வேண்டும். அதனோடு நிற்காமல், சாராயம் அருந்துவதனை நிறுத்துமாறு எச்சரித்து மட்டக்களப்பு மக்களை அறிவுறுத்தவேண்டும்; சூறாவளி வேகத்தில் பிரசாரம் செய்வது அவசியம்.

குடி குடியைக்கெடுப்பதோடு நிற்காது, பேரெண்ணிக்கை அழிவையும் கணப்பொழுதில் உண்டாக்கும் என்பதனை மதுப்பிரியர்கள் இனியாவது புரிந்து கொள்ளட்டும்.

# யாழ்ப்பாணம், தீவகப் பகுதிகளில்
# சொட்டு மருந்து வழங்கும் இடங்கள்

யாழ்ப்பாணம், செப். 5

5 வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் நாளை போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், மானிப்பாய், தீவகம் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் சொட்டு மருந்து வழங்கப்படும். நிலையங்களின் விவரம் வருமாறு:

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு:

★ கொழும்புத்துறை பிரசவ விடுதி
★ சென். அன்ரனிஸ் தேவாலயம்
★ குருநகர் மத்திய மருந்தகம்
★ குருநகர் தண்ணீர் தாங்கி
★ திருநகர் போஷாக்கு புனர்வாழ்வு நிலையம்
★ யாழ். மாநகர சபை பிரசவ விடுதி
★ யாழ். போதனா வைத்தியசாலை
★ அரியாலை போஷாக்கு புனர்வாழ்வு நிலையம்
★ அரியாலை பிரசவ விடுதி
★ நெடுங்குளம் சந்தி
★ அரசடி, கந்தர்மடம்.
★ அத்தியடி ஆயுள்வேதக் கல்லூரி
★ கொட்டடி ஆரம்ப சுகாதார நிலையம்.
★ நாவலர் வீதி கீரிப் பிள்ளையார் கோயிலடி பிரசவ விடுதி
★ கந்தர்மடம் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம்
★ நல்லூர் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம்
★ மூத்தவிநாயகர் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம்
★ வண்ணார்பண்ணை ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம்

### மானிப்பாயில்

★ சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலை
★ தொல்புரம் மத்திய மருந்தகம்
★ வட்டுக்கோட்டை மத்திய மருந்தகம்
★ பண்ணாகம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
★ வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை
★ குண்டடி சனசமூக நிலையம்
★ சாவற்கட்டு சனசமூக நிலையம்
★ நவாலி வை.எம்.சி.ஏ.
★ முள்ளி ஆரம்ப சுகாதார நிலையம்
★ மாகியப்பிட்டி ஆரம்ப சுகாதார நிலையம்.
★ மானிப்பாய் நகரசபை
★ மாதகல் சனசமூக நிலையம்
★ இளவாலை மத்திய மருந்தகம்.
★ பண்டத்தரிப்பு மத்திய மருந்தகம்.

### தீவகத்தில்

★ ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி.
★ நெடுந்தீவு ஆஸ்பத்திரி.
★ வேலணை கிழக்கு கிராமிய வைத்தியசாலை.
★ புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை.
★ காரைநகர் சுற்றயல் கூறு வைத்தியசாலை.
★ அனலைதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலை.
★ நயினாதீவு சுற்றயல்கூறு வைத்தியசாலை.
★ எழுவைதீவு சுகாதார நிலையம். (ஐ-15)

## மாணவரிடையே கட்டுரை, கவிதை போட்டி

நவாலி, செப். 5

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சன சமூக நிலையங்களின் சமாசம் மாணவ மாணவிகளுக்கிடையே பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

சனசமூக நிலையங்கள் ஊடாக நடத்தப்படும் 4 போட்டிகளிலும் வெற்றி பெறும் சன சமூக நிலையங்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் — இதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 10ஆம்திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும்— சமாசச் செயலாளர் கோரியுள்ளார். (இ-100)

## கப்பல் பயணிகளுக்கு

காங்கேசன்துறையிலிருந்து மன்னாருக்கானகப்பல்சேவை இன்று நடைபெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்றுபயணம் மேற்கொள்பவர்கள்காலை 8-00மணிக்கு ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## இலவச மண்வெட்டி

தென்மராட்சி, செப். 5

வன்னிப் பகுதியில் இருந்து தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிய கிளாலிப் பகுதியைச் சேர்ந்த 30 விவசாயிகளுக்கு கெயர் நிறுவனம் இலவசமாக மண்வெட்டிகளை வழங்கவுள்ளது. (இ-117)

## தையல் இயந்திரம்

சாவற்கட்டு கிராம சேவையாளர் பிரிவில் கணவன்மாரை இழந்த விதவைப் பெண்கள் 7 பேருக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (இ-100)

### மட்டக்களப்பில்

## புலிகளின் பகுதியில் மதுபான விற்பனைக்கு கட்டுப்பாடு

மட்டக்களப்பு, செப். 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் சாராயம் அருந்தியதால் பலர் மரணமான சம்பவத்தை அடுத்து, பொதுமக்கள் தமது கையிருப்பில் வைத்துள்ள மதுபானங்களை ஒப்படைக்குமாறு தமிழீழ காவல் துறை அறிவித்துள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பேரைதீவில் மட்டும் 15பேர் மரணமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் மதுபான விற்பனையை தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## செயலகத்துக்கு அலைந்துதிரியும் உள்ளூராட்சி ஓய்வூதியர்

யாழ்ப்பாணம், செப். 5

யாழ். செயலக ஓய்வூதியப் பகுதியில் ஊழியர் பற்றாக் குறையால் உள்ளூராட்சி மன்றங்களால் அனுப்பி வைக்கப்பட்ட ஓய்வூதியக் கோவைகள் தொடர்பான வேலைகள் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன

இதனால் தினமும் உள்ளூராட்சி ஓய்வூதியர்கள் செயலகத்துக்கு அலைந்து திரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஊழியர்களின் இளைப்பாற்று வேதனம் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவில் கணனியில் தயாரிக்க அரச அதிபர் நடவடிக்கை மேற்கொண்டபோதிலும் ஊழியர் பற்றாக்குறையால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை உள்ளூராட்சி ஓய்வூதியர் தவிர்ந்த ஏனைய திணைக்கள ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக கணனி அறிக்கைகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-4-117)

## கால்நடைகளுக்கான ஊசிமருந்து தட்டுப்பாடு

திருநெல்வேலி, செப். 5

யாழ். கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திலும், யாழ். கால்நடை வைத்தியசாலையிலும் மூன்று மாதத்துக்கு மேற்பட்ட வயதுடைய கோழிகளுக்கு நோய் வராது தடுப்பதற்காக போடப்படும் ''ரணிகற்'' ஊசி மருந்துக்கும்—

ஆடுகளுக்கு ஏற்பு வலி வராது போடப்படும் ஏற்பு தடுப்பு ஊசி மருந்துக்கும்— தட்டுப்பாடு நிலவுகின்றது.

திருமலைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் நடைபெற்று வந்த கப்பல் சேவை மூலம் இந்த தடுப்பூசி மருந்துகள் முன்னர் இங்கு திருகோணமலையிலுள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டு வந்தன.

தற்போது கப்பல் சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளதால் செஞ்சிலுவை சர்வதேசக் குழு கப்பல் மூலம் இவற்றை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு தடுப்பூசி மருந்துகளை கொண்டு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெறவேண்டும்,

இதற்கான நடவடிக்கைகளை திருகோணமலையிலுள்ள மாகாணப் பணிப்பாளர் மேற்கொண்டு வருவதாக யாழ். கால்நடை வைத்தியசாலை பதில் அத்தியட்சகர் டாக்டர் திருமதி புனிதவதி தங்கராசா தெரிவித்தார். (இ-135)

## பாடசாலை உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 5

பருத்தித்துறை கல்விக் கோட்டம் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

15, 17, 19 வயதிற்குட்பட்டோர் என மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடைபெறும்.

இன்று 17 வயதுப் பிரிவில் ஸ்ரீலங்கா வித்தியாலயத்திற்கும் கலட்டி றோ. க. ஆ. பாடசாலைக்கும் இடையிலும் —

சிதம்பராக் கல்லூரிக்கும், வேலாயுதம் ம. விக்கும் இடையிலும் —

கொற்றாவத்தை அ. மி. பாடசாலை மைதானத்தில் ஆட்டங்கள் நடைபெறும். (உ-5)

★ ★ ★

கரவெட்டி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

போட்டிகள் 15, 17, 19 வயதிற்குட்பட்டோர் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறுகின்றன.

இன்று 15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தை எதிர்த்து ஞானாசாரியார் கல்லூரியும் -

விக்னேஸ்வரா கல்லூரியை எதிர்த்து பொன்னம்பல வித்தியாலயமும் —

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மைதானத்தில் மோதவுள்ளன. (உ-5)

## யாழ். பிரதம தபாலகத்துக்கு புதிய ஜெனரேற்றர் கிடைக்கும்

ஆசிய அமெரிக்க சுதந்திர தொழிலாளர் நிறுவனமும், அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கமும் இணைந்து யாழ். பிரதம தபாலகத்திற்கு 60 கே. வி. வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்றினை அன்பளிப்புச்செய்யவுள்ளன. யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழேயுள்ளவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு நிதியுதவி அளிக்கவும் அந்த அமைப்பினர் முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார் (ஐ-5)

## சந்நிதி கோயில் ஊடாக பஸ் வண்டிகள் சேவை

நெல்லியடி, செப். 5

தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய உற்சவ நாள்களில் அடியார்களின் நன்மை கருதி விசேட பஸ் சேவையை நடத்துவதற்கு பருத்தித்துறை டிப்போவில் பஸ்கள் போதியளவு இல்லை இதனால் பருத்தித்துறை— யாழ். சேவையிலீடுபடும் 750, 751 இலக்க பஸ்கள் சந்நிதி கோயிலுடாக தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை தேர், தீர்த்தம் போன்ற உற்சவ காலங்களில் சந்நிதி கோயிலுக்கு பஸ் சேவை விஸ்தரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-109)

## நாளை

### ஆவணி 21

சனிக்கிழமை

**திதி:** சதுர்த்தி முற்பகல் 12.51 வரை.

**நட்சத்திரம்:** சித்திரை முற்பகல் 11.37 வரை.

சுபநேரம்: 3.04-4.34

ராகுகாலம்: 9.04-10.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 5

இலங்கை வர்த்தக வங்கியின் யாழ். கிளையின் விளையாட்டுக் கழகம் நடத்தும் — 20 ஓவர்களைக் கொண்ட — விலகல் முறை மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்படை உயர் அதிகாரி கட்டாயலீவில் அனுப்பப்பட்டது ஏன்

## ஹெலி கொள்வனவு முயற்சியுடன் தொடர்பு உண்டா?

கொழும்பு, செப். 5

விமானப்படையைச் சேர்ந்த எயர் வைய்ஸ் மார்ஷல் எல்மோ பெரேரா கட்டாய லீவில் அனுப்பப்பட்டதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எம்.ஐ. 24 ரக ஹெலி வாங்க முயற்சிக்கப்பட்டதாக வெளி வந்த தகவலுக்கும் சம்பந்தம் உண்டா?

சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இது குறித்து தெரிவித்திருப்பதாவது:

பொலீஸ் வட்டாரத் தகவல்களின்படி தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் எம்.ஐ. 24 ரக ஹெலிகளைக் கொள்வனவு செய்து, அவற்றை இலங்கைக்கு கொண்டு வந்து பின்னர் அவற்றை விமானப் படையினருக்கு வாடகைக்கு விடுவது தொடர்பாகவே ரகசியப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்,

கேள்வி:- எல்மோபெரேரா விமானப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரி. அவ்வாறான ஒருவர் தனியார் துறையினருடன் தொடர்பு கொண்டுள்ளது பற்றிய பிரச்சினைகள் எவையும் எழவில்லையா?

பதில்:- அவர் மாத்திரம் தான் தொடர்பு கொண்டுள்ளாரா அல்லது மேலும் பல அதிகாரிகளுக்கு தொடர்பு உண்டா என்பது குறித்து உறுதிபடக் கூற முடியாமல் உள்ளது. ஆனால் மிக மூத்த அதிகாரி ஒருவர் கட்டாய லீவில் அனுப்பப்படுவது இதுவே முதற் தடவையாகும். கட்டாய லீவில் அனுப்பப்பட்ட எல்மோபெரேரா எயர்வைஸ் மார்ஷல் தரத்தில் இருந்தவர். சில காலத்துச்கு முன்னர் இந்தப் பதவி வகித்தவர்களே விமானப் படைத் தளபதியாக பதவி வகித்தனர்.

கேள்வி: படைகளில் உள்ள சாதாரண அதிகாரிகளின் பிள்ளைகள் தனியார் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். அந்த அதிகாரிகளின் வீடுகள் மாளிகைகள் போல் விளங்குகின்றன. எனவே அவர்களின் சம்பளத்தில் இவ்வாறு அவர்களால் வசதியுடன் வாழ முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. இல்லையா?

பதில்: அது உண்மையே. இதுபோன்ற குற்றச்சாட்டு வேறு திசைகளில் இருந்தும் எழுப்பப்படுகிறது. குறிப்பாக படைகளில் இருந்து தப்பி ஓடியோரை மீண்டும் சேர்ப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது. இராணுவத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் போர்க்களத்திற்குச் சென்று தங்களது புகைப் படங்களை எடுப்பதில் கவனம் செலுத்துகின்றனர் என்பதும் ஒரு குற்றச்சாட்டாகும்.

## போர் நிறுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த 4 தினங்களிலும் போர் நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு ஐ. நா. சிறுவர் நிதிய வதிவிடப் பிரதிநிதி ஜோசெப் மகாசே இரு தரப்பினருக்கும் கோரிக்கை விடுத்திருந்தார்.

புலிகள் தரப்பில் இருந்து இதற்கான இணக்கம் குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. (இ-10)

## உதவி அரசாங்க அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்)

மன்னார் கச்சேரியிலிருந்து கொழும்பு புறப்படுவதற்கு தயாராக இருந்த வேளையில் எரிபொருள் நிரப்ப அண்மையிலுள்ள எரிபொருள் நிலையத்துக்குச் சென்றபோது அந்த வாகனம் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்தின் சாரதி பேசாலையில் வைத்து விடுவிக்கப்பட்டார் என பின்பு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

INSTITUTE OF INFORMATICS STUDIES

IIS JAFFNA, SRI LANKA

New Sessions Starting On Saturday 6th Sept. 97 at 10 a. m.

★ COMPUTER COURSES.
★ ENGINEERING DRAWING.
★ SHORT HAND & TYPEWRITING

DIRECTOR
IIS

68, Clock Tower Road,
Jaffna.

(C1395

முயற்சி அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திறன் விருத்தி மையம்

போதனாசிரியர்கள் தேவை

★ வயரிங் - ரிவைண்டிங் பயிற்சி
★ தட்டச்சு இயந்திரம் திருத்துதல் பயிற்சி
★ நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் பயிற்சி
★ குழாய் பொருத்துதல் - திருத்துதல் பயிற்சி

தகுதியுடையோர் 10-09-97 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

- நிர்வாகம்

106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-1475)

## கதிரிப்பாய்

(முதலாம் பக்கத் தொடர்)

அந்தப் பிள்ளை உடல் ரீதியான பாதிப்புகளுக்கு உட்பட வில்லை என்பதையும் அவளது உடலில் எதுவித காயங்களும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதையும் பிள்ளையின் பெற்றோரும் மருத்துவ அதிகாரியும் உறுதி செய்துள்ளனர்.

எவ்வாறாயினும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் தடுப்பதற்காக கடந்த 3 ஆம் திகதி காலை அந்தப் பிள்ளையும் அவளது பெற்றோரும் யாழ்ப்பாணம். சட்ட வைத்திய அதிகாரிமுன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணைகள் முடிவுற்றதும் பொலீஸார் ஊடாக அவரிடமிருந்து எழுத்து மூலமான அறிக்கை பெறப்படும்.

பெற்றோரின் எழுத்து மூலமான வேண்டுகோளைத் தொடர்ந்து அந்தப் பிள்ளை மற்றும் அவளது பெற்றோர் குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

சந்தேக நபரான படை வீரர் தற்போது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# கடத்தப்பட்ட இந்திய மீனவர் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

## ஒருவர் புலிகளிடம் பணயக் கைதியாம்

சென்னை, செப். 5

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 40 மீனவர்களையும், 10 இயந்திரப் படகுகளையும் விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றதாகவும்—

பின்னர் அவர்களில் 39 பேரையும், 8 படகுகளையும் விடுவித்து விட்டதாகவும்— சென்னையில் நேற்று வெளியிடப்பட்ட காவல் துறை தலைமை அலுவலக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

எஞ்சிய ஒரு மீனவரையும், 2 படகுகளையும் விடுதலைப் புலிகள் நாச்சிக்குடாவுக்கு கொண்டு சென்றிருப்பதாக அதில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

தங்களுக்கு டீசல், பெற்றோல், பற்றறிகள் ஆகியவற்றை அனுப்பினால் தாங்கள் பிடித்து வைத்திருக்கும் மீனவரையும் படகுகளையும் விடுவிப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து இராமேஸ்வரம் காவல் நிலையத்தில் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் —

கடலோர காவல் படையும் கடற் படையும் ரோந்துப் பணியை தீவிரப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும்— அந்தச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. (இ-4)

## நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நாடெங்கும் காணாமற் போனவர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள 1995 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மூன்று ஆணைக்குழுக்களை நியமித்தார்.

காணாமற்போன சுமார்19 ஆயிரம் பேர் தொடர்பான முறைப்பாடுகள் இந்த ஆணைக்குழுக்களுக்குக் கிடைத்திருந்தன.

பாதுகாப்புப் படையினர் அல்லது பொலீஸார் அல்லது அரசுக்கு ஆதரவு வழங்கிய குழுக்கள் ஆகியோரே இந்த ஆள் கடத்தல்களுக்குப் பொறுப்பு என அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## சோதனை...

(முதலாம் பக்கத் தொடர்)

சாவின் தோட்டம்- ஸ்ரான்லி வீதிச் சந்தி,ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதிச்சந்தி, வின்ஸர் சந்தி போன்ற இடங்களில் இருந்த சோதனைத் தள நிலைகள் தற்போது அகற்றப்பட்டுள்ளதை காணமுடிகிறது.

பொது மக்களின் நன்மை கருதி யாழ். நகரில் நிலை கொண்டுள்ள 512 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பி. பி. சுஸந்த மெண்டிஸ் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று அடுத்த சில நாள்களில் மேலும் சில சோதனைத் தள நிலைகள் அகற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-4-15-100-135)

## 4 ஊர்காவலர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்டதாக்குதலின்போது 4 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டதாகவும் —

அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன எனவும் — புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

இத்தாக்குதலின் போது உதவிக்கு வந்த விசேட அதிரடிப்படையினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தமது தரப்பில் இழப்புக்கள் ஏதுமில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-164)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

கத்துக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

அரசாங்கம் தீர்வுத் திட்டம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு முன்பு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி அடிக்கடி கூறிவருகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் நடைபெறவேண்டும்.

அந்தப் பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவை ஆகவும் ஆக்கபூர்வமானவையாகவும் அமையவேண்டும்.

புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க முன்னர் ஐ. தே. கவுடன் பேசி இணக்கம் ஒன்றுக்கு வரவேண்டிய அவசியம் இருப்பதால் ஐ. தே. கவுடனான பேச்சுக்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கும்.

இப்படி அமைச்சர் பீரிஸ் கூறினார். (இ-4-10)



நாடக அரங்கக் கல்லூரி

கருத்தரங்குத் தொடர் - 2

சிறுவர் நாடகத் தயாரிப்பில் நடாக பாடம்

குழந்தை
ம. சண்முகலிங்கம்

06-09-97 சனி பி. பி. 3-30

யா/ கந்தர்மடம்
சைவப்பிரகாச வித்தியாலயம்

ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இயக்குநர்.

(சி/1485)

இதுவரை காலமும் 52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கி வந்த எமது நிறுவனம் 27 - 08 - 97 முதல் கஸ்தூரியார் வீதியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

லிங்கம் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-1479)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம்,கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி மனையில் 05-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.